Deposition of witness
(Chapter XXIII Code of Civil Procedure)
In the Court of Subordinate Judge, Vaniyambadi, Tirupattur District

| | |
|---|---|
| Name | :Munisamy |
| Father's Name | :Murugan |
| Village | :Vanniya Pudhur |
| Taluk | :Vaniyambadi |
| Caste | :Vanniyar |
| Calling | :Driver |
| Religion | :Hindu |
| Age | :43 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 08.04.2026.

MCOP.No.137/2023 RW1 Name:**முனிசாமி**

**முதல் விசாரணை**

அழைப்பாணையின் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். 24.07.2013ம் தேதி நான் திருப்பத்தூரிலிருந்து வாணியம்பாடி நோக்கி வந்தேன். பொன்னேரியில் வாகனத்தை நிறுத்திவிட்டு டீ கடைக்கு சென்றபோது விபத்து ஏற்பட்டது. இருசக்கர வாகனத்தில் வந்த நபர் என்னுடைய வாகனத்தின் பின்னால் வந்து இடித்துவிட்டார். என்னுடைய வாகனம் நிறுத்தபட்டுதான் இருந்தது. ரோட்டின் ஓரமாக வண்டியை நிறுத்தியிருந்தேன். சமிச்சை விளக்கு போட்டிருந்தேன். என்னுடைய அஜாக்கிரதையால் விபத்து ஏற்படவில்லை.

குறுக்கு விசாரணை

தண்ணீர் கேன் லோடு நான் வண்டியில் ஏற்றி வந்தேன். நான் குடிப்பதற்கு தண்ணீர் வாங்குவதற்காக என்னுடைய வண்டியை நிறுத்திவிட்டு சென்றேன். வாகனத்தை ரோட்டின் நடுவில் நிறுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. பகல் நேரத்தில்தான் நான் சமிக்கை விளக்கு போட்டதாக கூறுகிறேன். பகல் நேரத்தில் சமிக்கை விளக்கு எரிவது தெரியாது. என்னுடைய அஜாக்கிரதை கவனக்குறைவால் விபத்து நடந்துள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக பொய் சாட்சியம் கூறுகிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 08/04/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்–கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.04.08 17:31:14 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.